REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 3] சென்னை: ஆனி 27உ திங்கள் (11—7—55) ★ ★ வெளியூர்: ஆனி 28உ செவ்வாய் (12—7—55) [இதழ் 23

ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளுக்கு ஆரஞ்சு ரசம்?

1956-ம் ஆண்டுத் துவக்கத்திலிருந்து இந்தியாவில் உள்ள சுமார் 1 லட்சம் ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளுக்கு ஆரஞ்சுப் பழ ரசமும் ஆரஞ்சுப் பழ வகையைச் சேர்ந்த மற்ற பழங்களின் ரசமும் கொடுப்பதற்கான பரீட்சார்த்தத் திட்டம் ஒன்றை இந்திய சர்க்கார் உணவு—விவசாய இலாகா பரிசீலனை செய்துவருவதாகக் கூறப்படுகிறது.

முதன் முதலில் இத்திட்டம், பரீட்சார்த்தமாக புதுடில்லி, கல்கத்தா, பம்பாய், சென்னை, நாகபுரி ஆகிய இடங்களில் அமுல் நடத்தப்படுமென்றும், இதுகுறித்து தங்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்குமாறு ஒவ்வொரு மாநில சர்க்காரும் மத்திய சர்க்கார் உணவு—விவசாய இலாகாவால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதென்றும் கூறப்படுகிறது.

கூடை செங்கல்லும் பிடாரிகள்!

தேசீய ஏடுகளின் தில்லுமுல்லு!

நிருபர்களின் கற்பனை சக்தி!

மணப்பாறை கழகக் கூட்டத்தில் நடந்ததென்ன?

"7—7—55ல், மணப்பாறை முசாபரி பங்களாவுக்கு அருகில் உள்ள மாவட்ட போர்டுக்கு சொந்தமான திடலில், மணப்பாறை திராவிட மாணவ முன்னேற்றக் கழகத்தினரால், தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியனைக் கொண்டு பொதுக் கூட்டம் நடத்த அனுமதி பெற்று விளம்பரம் செய்யப்பட்டிருந்தது.

"அந்த மைதானத்தில் ஒரு காங்கிரஸ் கொடி பறந்து வருகிறது: எனவே, 'அந்த மைதானம் காங்கிரஸ்காரர்களுக்குத்தான் சொந்தம்—பிறர், கொடியேற்றக் கூடாது,'—எனப் பொருந்தாத வாதம் செய்தனர்—இவ்வூர் இளைஞர் காங்கிரஸ் தோழர்கள்.

"மணப்பாறை டிப்டி தாசில்தார் அவர்கள், இருசாராரையும் கூப்பிட்டு, 'வழக்கம் போல் கொடியைக் கட்டி கூட்டம் நடத்தட்டும்; நாளை காலையில் எப்பொழுதும்போல் கொடியை அவிழ்த்துவிடுங்கள்; நான், நிலத்தின் உரிமை பொதுவாக உள்ளதா—அல்லது காங்கிரஸ்காரர்கள் சொல்வதுபோல், அவர்களுக்கே உரிமையானதா என்பதை பார்த்துத் தெரிவித்தவுடன், பொதுவானதாக இருந்தால், நீங்கள் தாராளமாய் தனித் தனியே கொடியேற்றிக் கொள்வதில் ஆட்சேபனை கிடையாது,' என்று சொன்ன முடிவை இருசாராரும் ஏற்றுத் திரும்பினோம்.

"ஆனால் மாலை 6 மணிக்கே மைதானத்தில், தி. மு. கழகக் கொடி ஏற்றப்பட வேண்டிய கம்பத்தின் அருகே, இளைஞர் காங்கிரஸ் தோழர்கள் பலர் உட்கார்ந்துகொண்டு, கொடி ஏற்றுவதைத் தடை செய்யப் போவதாகக் கூறினர்.

"எனவே, மீண்டும் டிப்டி தாசில்தாரிடம் நிலைமையைக் கூறினோம்; அவர், 'பாதுகாப்புக்கு போலீசார் போயிருப்பர்; இளைஞர் காங்கிரஸ்காரர்கள், இன்று, கொடியேற்றி கூட்டம் நடத்துவதைத் தடை செய்ய மாட்டார்கள்; எனவே, நீங்கள் கூட்டத்தை நடத்தலாம்,' என்று சொல்லியனுப்பினர்.

பின்னர், நாங்கள், பொதுக் கூட்டம் நடத்த இருந்த மைதானத்திற்கு வந்து, கொடியேற்ற முயற்சிக்கையில், தயாராக இருந்த இளைஞர் காங்கிரஸ் தோழர்கள், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களைக் கொடிக் கம்பத்தருகே வரவொட்டாமல், பலாத்காரமாய் தடுத்ததுமின்றி, ஒரு இளைஞர் காங்கிரஸ்தோழர் கொடியை அறுத்துக்கொண்டு ஓடி, நெருப்பு வைக்கப் போவதாகச் சொன்னர்.

"அருகில் நின்றுகொண்டிருந்த நமது கழகத் தோழர், இளைஞர் காங்கிரஸ் தோழர்களின் பலாத்காரத்தையும் பொருட்படுத்தாமல், கம்பத்தின் மீது ஏறி, நம் கழகக் கொடியைக் கட்டி பறக்க விட்டார்.

"இந்த நிகழ்ச்சியின் துவக்கத்திலிருந்து கடைசி வரையிலும், போலீசார், இளைஞர் காங்கிரஸ் தோழர்களைக் கலைந்து போகும்படி கேட்டுக் கொண்டும்—அப்புறப்படுத்த முயன்றும் வந்தனர்; அதை அலட்சியப்படுத்தி இ. கா.-வினர் அந்த இடத்திலேயே இருந்துகொண்டு, பலாத்காரச் செயல்களைத் தொடர்ந்து நடத்திவந்தனர். கடைசியாக 'குழப்பம் செய்பவர்களை போலீஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்வோம்' என்று போலீசார் கூறியபின், கலகம் விளைவித்துக் கொண்டிருந்த இ.கா.-வினர் அந்தஇடத்தை விட்டு கலைந்து சென்றனர்.

"பின்னர், கூட்டம் 8 மணிக்குத் துவக்கப்பட்டது. மாவட்டச் செயலாளர் தோழர் அம்பில்-தர்மலிங்கம் அவர்கள் பேசும்போது, காங்கிரஸ்காரர்களும், தி.மு. கழகத்தைச் சேர்ந்த நானும் மாவட்ட போர்டு போன்ற பொது நிர்வாகத்தில் பங்கு கொள்ள ஜனநாயகம் அனுமதிக்கும்போது, பொது இடங்களில் 'காங்கிரஸ் கொடிக்கு அருகில், தி. மு. கழகக் கொடி பறப்பதை ஏன் மறுக்கவேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டி விளக்கம் தந்தார்.

"பின்னர், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மணப்பாறை வட்டக் கிளைகள் பலவற்றின் வரவேற்பை ஏற்றுக்கொண்டு, பொதுக்கூட்டங்களில் இதுவரை இவ்வூரில் நடைபெற்றிருக்காத அளவு பெரும் ஜனத்திரள் கூட்டுவதற்கு காரணமாயிருந்த இளைஞர் காங்கிரஸ் தோழர்களுக்கு நன்றியறிதலை முதற்கண் தெரிவித்துக்கொண்டார்.

"ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் என்பதால், அசம்பாவித நிகழ்ச்சிகளில் இறங்காதீர்கள்; தேவை நிகழ்ச்சிகளைப் பல இடங்களில் செய்வதன் மூலம் தி. மு. கழகத்தினரை மடக்கிவிடலாம் என எண்ணாதீர்கள்; ஜனநாயகம் என்ற சொல்லுக்கு ஓரளவாவது மதிப்புக் கொடுங்கள்" என்று அவர்களை கேட்டுக்கொண்டார்.

"பின்னர், அவர், இளைஞர் காங்கிரஸ்காரர்கள் பலாத்காரச் செயலில் ஈடுபட்டு, கூட்டத்தை தடை செய்ய முயலுகையில், கடமை—கண்ணியம் — கட்டுப்பாடு ஆகியவற்றைக் கடைப்பிடித்து வெற்றி கண்ட இயக்கத் தோழர்களைப் பாராட்டிப் பேசினர்.

"பின்னர், கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய மணவை தி. மு. கழகச் செயலாளர் தோழர் காசிநாதன் நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

"தங்களது முயற்சியிலே தோல்வி கண்ட இ. கா.-வினர், தி. மு. கழகத் தோழர்களான எ.எஸ். கணபதி, என். வடிவேல், எம். சேது, முருகேசன், நீலகிருட்டிணன், அமீர்பாட்சா ஆகியோர் தங்களை அடித்துக் காயப்படுத்தி விட்டதாகப் பொய் ரிப்போர்ட் தாக்கல் செய்து இருக்கிறார்கள்.

"இரவு முழுவதும் போலீசார், தி. மு. கழகக் கொடியைப் பாதுகாத்து வந்தனர். நகரெங்கிலும் இளைஞர் காங்கிரசாரின் அசம்பாவித செயல் குறித்து பேசப்பட்டு வருகிறது.

"உண்மை நிகழ்ச்சிகள் இவ்விதம் நடைபெற்றிருக்க, எதிர்க்கட்சி ஏடுகளில் பொதுச் செயலாளர் அவர்களிடம் இருந்து கொடி பிடுங்கப்பட்டது எனச் செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது; பொதுச்செயலாளர் கொடிக் கம்பத்திற்கு இடையில் செல்லும் முன்னமேயே சம்பவங்கள் நடைபெற்றுவிட்டன,"

என்று, மணவை தி. மு. கழகச் செயலாளர் தோழர் காசிநாதன் அவர்கள் அறிவிக்கிறார்.

வட நாட்டு கோதுமைக்கு தென்னாடு சந்தையாகிறது!

விலை உயர்வைக் கட்டுப்படுத்தும் பெயரால் கோதுமைத் திணிப்பு!

புதுடில்லி, ஜுலை 10—

இந்திய சர்க்கார் தங்களது கையிருப்பில் இருக்கும் கோதுமையை உடனடியாகத் தென்னாட்டில் விற்பதென முடிவு செய்துள்ளனராம்.

"வடநாட்டு மார்க்கெட்டுகளில் நியாயமான விலைக்குக் கோதுமை கிடைக்கப்பெற்றாலும், தென்னாட்டு மார்க்கெட்டுகளில் குறிப்பிட்ட அளவு நியாயமான விலையில் கோதுமை கிடைக்கவில்லை. இந்த நிலைமையைப் போக்கவே இந்திய சர்க்கார், தனது கையிருப்புக் கோதுமையை தென்னாட்டில் விற்று, அதன்மூலம் தெற்கு, வடக்கு பகுதிகள் இரண்டிலும் ஒரே விலை நிலைக்கும்படி செய்வதென்ற முடிவுக்கு வந்துள்ளது; இந்த முடிவு உடனடியாக அமுல் நடத்தப்படும்,"

என்று, மத்திய உணவு இலாகா டைரக்டர்-ஜெனரல், தாம் விடுத்துள்ள அறிக்கைக் குறிப்பொன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

சிறைச்சாலையை அகாலியர் நிரப்புகின்றனர்!

சென்ற கிழமைவரை 7,900 கிளர்ச்சியினர் கைதாகியுள்ளனர்!

கிளர்ச்சி தொடர்ந்து நடைபெறுமாம்!

"இதுவரையிலும் எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற சர்க்கார் முன்வராததால், எங்கள் கிளர்ச்சியும் மேலும் நீடித்துக் கொண்டே போகும்,"

என்று, பஞ்சாப் அகாலிதளம் அறிவித்திருக்கிறது.

பஞ்சாப் மொழிவழி மாநில கோரிக்கையை எடுத்துக்கூறும் தங்கள் ஒலி முழக்கங்களை சர்க்கார் தடை செய்தது நீக்கப்பட வேண்டும் என்பதும், சிறை செய்யப்பட்ட அகாலிதளத் தொண்டர்கள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும் என்பதுமே அவர்களது கோரிக்கையாகும்.

இந்தக் கிளர்ச்சியையொட்டி, இத்திங்கள் 3-ந் தேதி வரையிலும், மொத்தம் 7,963 அகாலி தொண்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அகாலிதள செயலாளர் சர்தார் அஜ்மீர் சிங் கூறியிருக்கிறார்.

'சென்ற 4-ந் தேதியன்று நடைபெற்ற போலீஸ் சம்பவம் அவசியமற்றது—தேவைப்படாதது' என்றும், அவர் குறிப்பிட்டார்.

தலைமறைவாக இருந்து வருகின்ற மாஸ்டர் தாரா சிங்கின் மைத்துனரான சர்தார் பச்ஷிஷ் சிங்கை கண்டுபிடிக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காகவே, போலீசார், சிரோமணி குருத்துவார் பிரபந்தக் குழு, அகாலிதளம், மகாபஞ்சாப் குழு போன்ற காரியாலயங்களில் புகுந்து தஸ்தாவேஜுக்களையும், மற்ற பொருட்களையும் கைப்பற்றியதுடன், அகாலிகளுடன் மோதியும் இருக்கின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கோஷ்டி கூட்டத்தினரைக் கலைக்க:

போலீஸ் கண்ணீர்புகை பிரயோகம்

குருத்துவாரா மஞ்சி சாகிபுக்குச் செல்லும் ஒரு சந்தில் அகாலிகள் பஞ்சாப் மாநிலம் கோரி ஒலிகள் எழுப்பினர்; மகாபஞ்சாப் ஆதரவாளர்கள் (இந்துக்கள்) எதிர் ஒலிகளை முழங்கினர். கூட்டம் கட்டுக்கடங்காமற்போகவே, போலீசார் கண்ணீர்ப் புகை பிரயோகித்தனர். இரு குழுவினரும் வெவ்வேறு திசைகளில் கலைந்து சென்றனர்.

மற்றும் இரு இடங்களில், மகாபஞ்சாப் ஆதரவாளர்களைக் கலைக்க, போலீசார் கண்ணீர்ப் புகை பிரயோகம் செய்ய வேண்டியதாயிற்று.

ஜுலை 4-ந் தேதியன்று செகியர் ஆலயத்துக்கு எதிரே போலீசாருக்கும்—அகாலிகளுக்கும் மோதுதல் ஏற்பட்டு பலர் காயமடைந்தனர்; இது சம்பந்தமாக அகாலிகள் இன்று 'ஆட்சேப தினம்' நடத்தினர்.

'மகா பஞ்சாப்' ஆதரவாளர்களில் ஐவரைப் போலீசார் கைது செய்தனர்.

★

தாராசிங் மனு தள்ளுபடி.

தம்மீது தொடரப்பட்டுள்ள வழக்கை, பஞ்சாப் மாநில உயர்நீதி மன்றத்திற்கு மாற்றும்படி கேட்டுக் கொண்டு அகாலிதளத் தலைவர் மாஸ்டர் தாரா சிங் தாக்கல் செய்த மனுவை, பஞ்சாப் உயர்நீதி மன்றம் தள்ளுபடி செய்துவிட்டதாகத் தெரிகிறது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 11—7—'55 திங்கள்

மாஸ்கோ மகிழ்ச்சியும் கான்பூர் கண்ணீரும்!

கடந்த நாற்பது நாட்களாக இந்தியத் துணைக்கண்டத்தின் பிரதமர்—ஆவடி சமதர்ம வடிவத் தீர்மானத்தின் சிருஷ்டிகர்த்தா மாஸ்கோ, யூகோ, போலந்து, இத்தாலி, வாடிகன் ஆகிய இடங்களில் உல்லாசப் பிரயாணம் செய்து வருகிறார்—இல்லை—உலக சமாதானத்திற்கு விதை தூவி வருகிறார்!

தமது வெளிநாட்டுப் பயணத்தில் மிகுதியான நாட்களை, சோவியத் புத்துலகக் காட்சிகளைக் காண்பதிலேயே செலவழித்துள்ளார் அப்பெருந்தகை!

இந்தியத் துணைக்கண்டத்துத் தோட்டங்களில், பழுத்துக் குலுங்கியவற்றில், உயர்ந்த ரக மாம்பழங்களாகப் பொறுக்கி எடுத்து, கூடை கூடையாக மிக மிகப்பாதுகாப்புடன் மாஸ்கோவிற்குக் கொண்டுபோகச் செய்திருக்கிறார் பண்டிதர். சோவியத் ஆட்சியாளர்களுக்கு, வனப்பும் உருசியும் கூடிய மாம்பழங்களை, தமது கரங்களினாலேயே துண்டித்துப் பரிமாறி இருக்கிறார், காஷ்மீர் பண்டிதர்! தோலைச் சீவி எறிந்துவிட்டு, தான், மாம்பழங்களை சிறு சிறு துண்டுகளாக நறுக்கிக் கொடுத்தாரா, அம்மாம்பழங்களில் சேலத்து மல்கோவாவும் இடம் பெற்றிருந்ததா, இந்திய மாம்பழங்களின் உருசி அறிந்துகொண்ட மாஸ்கோ ஆட்சியினர் அம்மாஞ் செடிகளைத் தங்கள் நாட்டிலும் ஏராளமாக நட்டுப் பயிராக்க முன் வந்துள்ளனரா, என்பன போன்ற ஐயப்பாட்டிற்கெல்லாம், இனித்தான் பண்டிதர் மக்கள் சபை கூட்டத்தில் விளக்கம் தந்திடுவார் என நம்புகிறோம்!

அன்னிய நாட்டார் காணாத அணு சக்தியால் இயங்கும் மின்சார உற்பத்திச் சாலையை, முதல் முதலாக வேற்று நாட்டின் முதல் அமைச்சர் கண்டிடும் பேறு, நமது பிரதமர் நேருவுக்கே கிடைத்தது!

சைபீரியா பாலை நிலம், கோதுமை குலுங்கும் பயிர் நிலமாக மாற்றப்பட்டிருப்பதை, நமது பிரதமர் கண்டார் — களிகொண்டார் — அப்புதுமையைப் புரிந்த பாட்டாளிகளையும், அவர்களுக்குச் செயல் வகைகளைக் காட்டித்தந்த விவசாயப் பேரறிஞர்களையும், நாவில் நீர் வற்றிப்போகும் வரையில் வாழ்த்தினர்!

முஸ்லீம் மக்களின் வரவேற்பைப் பெற்றார்; வாழ்த்துரையை வாங்கிக்கொண்டார்; உருது மொழியில் அவர்கள் முகமன் கூறிடக் கேட்டு, அதே மொழியில் தானும் அவர்களை உற்சாகப்படுத்தினர்! மேலும், தேகத்தில் தெம்பில்லையே—இத்தகைய புகழ் மொழிகளையும் பாராட்டுச் சிறப்புரைகளையும் கேட்டுக்கொண்டே இருக்க—என, நமது பிரதமர் துக்கித்தார்—சோகித்தார்!

பல்கலைக் கழகங்களைக் கண்டார்; விருந்து வைபவங்களில் கலந்து கொண்டார்; இராணுவ ஒத்திகைகளைப் பார்த்து பூரித்தார், நமது பிரதமர்!

அதிகம் கூறுவானேன்? நமது பிரதமர் நேருவுக்கு மாஸ்கோ மண்டலாதிபதிகளும் மக்களும் தந்த வரவேற்பைப் பொதுவுடைமையர் கிழமை ஏடான 'ஜனசக்தி' கூறுவதைவிடவா, நம்மால் அதிகமாகக் கூறிவிட முடியும்?

அந்த ஏட்டின், கடுகைத் துளைத்து ஏழு கடலைப் புகுத்தியுள்ள அர்த்தபுஷ்டியான வாசகம் வருமாறு:—

"என்றென்றும் மறக்க முடியாத தம்முடைய சோவியத் விஜயத்தில், சென்றவிடமெல்லாம் பிரதமர் நேருவிற்கு **மாண்பு மிக்க ராஜோபசார வரவேற்புகள் கிடைத்தன."**

தாம், போகும்பொழுது கூடவே வாரிக் கட்டிச்சென்ற உலக சமாதான வித்துக்களை, சோவியத் நாட்டின் எட்டு திக்குகளிலும், ஒரு மூலைமுடுக்கையும் விடாமல், தூவிவிட்டு வந்திருக்கிறார், நமது பிரதமர்! அவர் இட்டது, சாதாரண வித்தா? உலக சமாதான வித்தல்லவா? அதற்கு, இவ்வளவு உபசாரமும், கோலாகலத் திருஉலாவும் தேவைப்படுகிறது போலும்! இந்த வேடிக்கை விநோதத்தில் பொதிந்துகிடக்கும் கருத்தாழங்களை, நம் போன்ற சாதாரணக் கண் படைத்தவர்களால் காண இயலாதுதான்! தேவை, சர்வதேச கண்ணோட்டம் தேவை!

நமது பிரதமர் நேருவின் சோவியத் திக்விஜயம் ஏறத்தாழ ஒரு திங்கள் நடைபெற்றிருக்கிறது!

அங்கே கண்ட காட்சிகள், பெற்ற விருதுகள், உண்ட விருந்துகள், கிடைத்த பாராட்டுரைகள், உள்ள மகிழ்ச்சியையும், உடலுக்குப் புது விசையையும் அவருக்குக் கொடுத்திருக்கின்றன.

அவர் திரும்பி வரப் போகிறார், தாய் நாட்டிற்கு நானேயோ-மறுதினமோ — வெற்றிக் களிப்புடன், உலக சமாதானத்தை நிலைநாட்டிவிட்டோம் என்ற மனோ பிராந்தியுடன்!

பம்பாய் விமான நிலையத்தில் காத்துக்கிடக்கிறது—மாஸ்கோவில் அவருக்கு அளிக்கப்பட்டதைவிட, பன்மடங்கு உபசாரம், நல்லுரை! பூரண கும்பமெடுத்து, அவர்தம் நெற்றியில் குங்குமத் திலகமிடத் துடியாய்த் துடித்துக் கிடக்கின்றனர், மாண்புமிக்க மங்கை நல்லார்கள்! எடுபிடிகள் ஏராளம், முகத்துக்கு முன்னால், கட்டியங்கூறக் காத்துக் கிடக்கின்றன, அவர் வழியில் விழி வைத்து!

இந்தப் பகட்டான சந்தடிக் கிடையிலே, கான்பூரிலிருந்து கடந்த இரண்டு திங்களுக்கு மேலாக அலைமோதிக்கொண்டிருக்கும் அழுகுரல் பிரதமர் செவியில் புகுவதெங்ஙே?

அவர்கள் வேதனைப் பெருமூச்சு, இவ்வளவு பெரும் வரவேற்பு ஆரவாரத்தையும் கமுத்திவிட்டு, பிரதமரின் காதருகிலாவது அண்ட முடியுமா?

துப்பாக்கிப் பிடித்தோர், தடி தாங்கியோர் வரிசைகளைத் தாண்டிக்கொண்டு வரும் ஆற்றல், கான்பூர் தொழிலாளர்களின் விம்முதலுக்கு எப்படி ஏற்பட்டுவிட முடியும்?

சோவியத் மக்கள் பெற்று வரும் சுகவாழ்வையும், அதனால் அவர்கள் முகங்களில் ஒளிவீசிக் கொண்டிருக்கும் பொலிவையும், அவர்களது கட்டுக் கடங்காது தோற்றமளித்த கொண்டிருக்கும் புன்முறுவலையும் கண்குளிரக் கண்ட பண்டித நேருவுக்கு, கான்பூரில் தொழிலாளர்—ஒருவரல்ல இருவரல்ல - ஐம்பதினாயிரம்பேரின் கண்ணீர்தானா, முதலில் காணத்தகு காட்சியாக இருக்கவேண்டும்?

கான்பூரில் ஆலைத் தொழிலாளர்கள் ஐம்பதினாயிரம் பேர் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டு நாட்கள் எழுபதை எட்டப்போகிறது. பிரதமர் மாஸ்கோ புறப்பட்டபொழுது, கான்பூர் தொழிலாளர் வேலை நிறுத்தம் துவங்கப்பட்டு கிட்டத்தட்ட ஒரு திங்களாயிற்று!

தொழிலாளர்களால் சிருஷ்டித்து வளர்க்கப்பட்டு வரும் பொதுவுடைமைப் பூங்காவில் கொத்துக் கொத்தாகப் பூத்துக் கிடக்கும் பலவித வண்ண மலர்களைக் கண்டு மகிழுவர், அவைகளால் உமிழப்படும் நறுமணத்தை நுகர்ந்து இன்புறவும் மாஸ்கோ நாடிய ஆசியஜோதி, கான்பூரில் தொழிலாளர் ஒரு திங்களாகச் சிந்திக்கொண்டிருந்த இரத்தக் கண்ணீரைத் துடைத்துவிட்டுச் சென்றிருக்க வேண்டும். அதற்குரிய ஏற்பாட்டையாவது செய்துவிட்டு, மாஸ்கோவிற்கு விமானம் ஏறி இருக்க வேண்டும், நமது பிரதமர்!

கான்பூர் தொழிலாளரும் கேட்கவில்லை அக்கேள்வியை; நாமும் கேட்கவில்லை அவ்வினாவை; ஆனால், வரலாறு இடித்துக் கேட்கிறது, இந்தியப் பிரதமர் நேருவை! ஆள வந்தவரின் கடமை அது என ஆட்சிபீட அரிச்சுவடி அத்தாட்சி கூறுகிறது!

சுவையும் கவர்ச்சியும் உடைய கனிந்த மாம்பழங்களை பக்குவப்படுத்தி, நமது பிரதமர், சோவியத் ஆளவந்தார்களுக்குக் கனிவாகக் கொடுத்தபொழுது, அவர்கள் கான்பூர் பற்றி கேட்டிருந்தால், நமது பிரதமர் முகத்தில் அசடு கொட்டி இருக்காதா?

கான்பூர் வேலை நிறுத்தத்தைக் குறித்துக்கூட கேட்டிருக்க வேண்டாம்—'முதல் ஐந்தாண்டு திட்டத்தில் கான்பூரில் என்ன தொழிற்சாலைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன?' என சோவியத் தலைவர்கள், விஷய விளக்கத்திற்காக கேட்டிருந்தாலும், 'கான்பூர்' என்ற சொல்லைக் கேட்டதும் பண்டிதரின் முகத்தில் மகிழ்ச்சியா பொங்கி இருக்கும்—சிவப்பல்லவா ஏறி இருக்கும்?

உலகச் சமாதானத்தைத் தேடினாலென்ன, உள்நாட்டில் உபத்திரவத்தையா விதைக்க வேண்டும்?

பண்டிதரின் மாஸ்கோ மகிழ்ச்சி பற்றி பூரிப்பாகப் பேசிக்கொண்டிருப்போர், அந்த மகிழ்ச்சி, கான்பூர் கண்ணீரைத் துடைக்கப் பயன்படாததுடன், அக் கண்ணீரை வளர்த்துவரவும் பயன்படுவதைக் காண வேண்டும். ஏன் இந்த முரண்பாடு இருக்கிறது, நமது பிரதமரின் கருத்திலும் செயலிலும் என்பதற்கு அவர்கள் சமாதானம் தேட வேண்டும். அந்த சமாதானம் தேடும் பணியை, தங்களுக்காகவே, அவர்கள் தேடிக்கொள்ள வேண்டுகிறோம்!

ஒய்யாரக் கொண்டையாம்—உள்ளே ஈரும் பேனுமாம்! மாஸ்கோ மகிழ்ச்சியாம்—கான்பூர் கண்ணீராம்!

'தென்னாட்டிலா மக்கள்சபைகூட்டம்?'

'அதிகச் செலவாகுமே' என்கிறார் அமைச்சர்!

பெங்களூர், ஜூலை 8—

தென்னாட்டில்—குறிப்பாக பெங்களூரில், சொற்ப காலத்திற்கு இந்தியப் பாராளுமன்றக் கூட்டத்தை நடத்துவதில் ஆட்சேபனை எதுவும்கிடையாதென்றும், ஆனால் இதற்கு அதிகமான பணச் செலவாகும் என்றும், இந்திய சர்க்கார் செய்தி, ஒலிபரப்பு மந்திரி கேஸ்கர் கூறியிருக்கிறார்.

மொத்தம் 750 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமல்லாமல், மத்திய சர்க்கார் அதிகாரிகளுக்கும் தங்குவதற்கு இடவசதி செய்து தரவேண்டியிருக்குமென்றும், இதனால் மாநில சர்க்காருக்குத்தான் மிகவும் சிரமமாக இருக்குமென்றும், அவர் மேலும் கூறியிருக்கிறார்.

மாறி வரும் சமூகத்தில் மத உணர்வா?

'முற்போக்கு சட்டங்களை நிறுத்துவது அர்த்தமற்றது'

பயனற்றுப்போன முறை பற்றி மத்திய சர்க்கார் அமைச்சர்

"மத உணர்ச்சிகளின் காரணமாக 'முற்போக்கான சட்டங்கள்' இயற்றுவதை நிறுத்தி வைப்பது அர்த்தமற்ற ஒரு செயலாகும்;

"திருமணம், வாரிசு உரிமை போன்றவை சம்மந்தப்பட்ட முற்போக்கு சட்டங்கள், விரிவான மனிதாபிமானத்துடன் மக்களிடையே உள்ள உறவு நிலையை ஒழுங்குபடுத்த முற்படுபவை; ஆகவே, மத விவகாரங்களில் அவை குறுக்கிடுபவை அல்ல,"

என்று மத்திய சர்க்கார் அமைச்சர் எச். வி. படாஸ்கர் கூறியிருக்கிறார்.

பெண்களுக்குத் தகப்பனாரது சொத்துக்களில் பங்கு கொடுப்பது, 'அவிபக்த' இந்து குடும்பங்களுக்கு ஊறுசெய்வதாகும் என்ற கருத்து பற்றி அவர் பேசுகையில், 'மாறிவரும் சமுதாய, பொருளாதார அமைப்பில் 'அவிபக்த' குடும்ப முறை பயனற்றதாகி விட்டது; அது ஏற்கனவே குலைந்துபோய்விட்டது" என்று குறிப்பிட்டார்.

பற்றாக்குறை திட்டம்

ஆந்திர மாநிலத்தின் 1955—56-ம் ஆண்டிற்கான வரவு—செலவுத் திட்டத்தின்படி மொத்த வருமானம் ரூ. 21,93,03,000 என்றும் செலவு ரூ. 25,64,35,000 என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, ரூ. 3,66,31,000 துண்டு விழுகிறது.

மக்கள் சீனா — வியட்மின் நல்லுறவு ஒப்பந்தம்

மக்கள் சீனாவும், வடக்கு வியட்நாம் (வியட்மின்) சர்க்காரும் தங்களிடையே 'நல்லுறவு ஒப்பந்தம்' ஒன்று செய்துகொண்டுள்ளதாம். இந்த ஒப்பந்தப்படி, வியட்மினுக்கு, மக்கள் சீனா தொழில் நுணுக்க உதவிகளை அளிக்க ஒப்புதல் தந்துள்ளதாம்.

ஆசிரியருக்குக் கடிதம்:

'தினத் தந்தி'யின் மானங் கெட்ட பிதற்றல்!

ஆசிரியர் 'நம் நாடு'

ஐயா,

ஒருவன், நிலத்தில் பருத்தி விதைத்துவிட்டு வீட்டிற்கு வந்து, 'பருத்தி விதைத்திருக்கிறேன்' என்று கூறினான்; உடனே அவன் மனைவி, 'எனக்கு ஒரு சேலை வேண்டும்' என்று கேட்டதைத் தொடர்ந்து, மூத்த பெண் குழந்தை, 'எனக்கு ஒரு சித்தாடை வேண்டும்,' என்றும், இளைய பெண் குழந்தை, 'எனக்கு ஒரு பாவாடை வேண்டும்' என்றும், பையன், எனக்கு ஒரு வேட்டி வேண்டும்' என்றும் கூறினராம். பருத்தி விதைத்த அந்த குடித்தனக்காரர், 'விதையே இப்போது தானே தூவியிருக்கிறேன்; பருத்தி விளையட்டும், பார்க்கலாம்,' என்று பதில் கூறினாராம்!

நாட்டில், இப்படி ஒரு கதை கூறப்படுவதுண்டு!

சென்னைக்கும் — இரங்கூனுக்கும் இடையில் கப்பல் போக்குவரத்தை நடத்திவந்த சிந்தியா கம்பெனியினர், இப்போது அந்தப் போக்குவரத்தை நிறுத்திவிட்டனர்—சில காரணங்களைக் காட்டி!

வெளிநாட்டில் பிழைப்புத் தேடிக் குடியேறி, தாயகம் வந்து சென்றுகொண்டிருக்கும் தென்னாட்டு ஏழை எளியவர்கள் இந்தத் திடீர் நிறுத்தத்தால் எவ்வளவு தூரம் பாதிக்கப்படுவார்கள் என்பதை எடுத்துக் காட்டி, மீண்டும் கப்பல் போக்குவரத்து வசதி கிடைக்கச் செய்யவேண்டியதின் அவசியம் குறித்தும், 'நம் நாடு' இதழில், 'சிந்தியாவின் துரோகம்' என்ற தலைப்பில் தலையங்கம் வெளிவந்திருக்கிறது.

அதற்கு இரண்டு தினங்களுக்கு முன்பு, திருவல்லிக்கேணியில், சிந்தியாவின் செயலைக் கண்டித்தும், உடனடியாகக் கப்பல் போக்குவரத்தை மீட்க சென்னை அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தக் கோரியும், கப்பல் பிரயாணிகள் சங்கத்தின் சார்பில் கூட்டமொன்று நடைபெற்றது. டாக்டர் வரதராசுலு நாயுடு, எஸ். எம். பாசில் போன்றவர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டனர்; பின்னர், இதுபற்றி தகவல் இல்லை.

'தினத் தந்தி'யும், தன் 'தலையங்க'ப் பகுதியில் இதுபற்றி எழுதியிருந்தது.

இப்போது, பர்மா தமிழர்கள் தூதுக் குழு ஒன்று, குற்றாலத்தில், மத்திய போக்குவரத்து மந்திரி அழகேசனிடம் சென்னை—இரங்கூன் கப்பல் போக்குவரத்து பற்றி முறையிட்டபோது, வேறு எல்லாவற்றிற்கும் கூறுவது போலவே, அந்த முறையீட்டிற்கும், 'கவனிக்கிறேன்—ஆவன செய்ய முயற்சிக்கிறேன்,' என்று மந்திரி பதில் தந்திருக்கிறார்.

'தினத் தந்தி'யின் வழக்கமான போக்கு, மந்திரியின் இந்தப் பதிலை தனக்கு வெற்றி என்று கூறச் செய்திருக்கிறது போலும்! அதைக் காணும்போது, பருத்தி விதைத்தவன் பற்றிய மேற்கண்ட கதைதான் என் கவனத்திற்கு வந்தது. என் செய்வது? 'தினத் தந்தி' மக்கள் முற்போக்குப் பத்திரிகை ஆயிற்றே!

இதைக்கூட அது செய்யாவிட்டால் அந்தப் பெயர் அதற்குப் பொருந்துமா!

கமலதாசன்
சென்னை—2.

ரஷ்யா முன்வருகிறது!

1949-ம் ஆண்டில், தான் உறுப்பினராக இருந்துவந்த உலக சுகாதார நிறுவனத்தை விட்டு விலகிய சோவியத் ரஷ்யா, மீண்டும் இப்போது அதில் சேர்ந்து ஒத்துழைக்க இருப்பதாக அறிவித்திருக்கிறது.

அந்த நிறுவனத்தின் மூலம் ஐ. நா. குழந்தைகள் உதவி நிதிக்கு 1,80,000 'ஸ்டாலிங்' (ரஷ்ய நாணயம்) பெறுமான உதவி அளிக்குமென்று ரஷ்யப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்திருக்கிறார்,

கற்பை களங்கப்படுத்தி பேசியதால் வந்தவினை

அவமானம் தாளாத
பெண்மணியின் துணிகர முடிவு

தனது கற்பைப் பற்றி சுற்றுப்புறத்தினர் களங்கமாகப் பேசியதைத் தாளாத 23 வயதுடைய பெண், தன்னையும் தனது இரண்டு குழந்தைகளையும் நெருப்புக்கு பலியிடத் துணிந்துவிட்டாள்.

இப்பெண்ணின் வீட்டிற்கு ஒருவர் வந்தார்; அப்பொழுது கணவன் வீட்டிலில்லை. இந்த நபரைப் பற்றி சந்தேகமாக எண்ணிவிட்ட சுற்றுப்புறத்தினர் அவரை அடித்துத் துரத்தி, பெண்ணையும் கேவலமாகப் பேசியதாகத் தெரிகிறது; இந்த அவமானத்தைத் தாளாத பெண் இறுதியில் இம்முடிவுக்கு வந்துவிட்டாள்.

சென்ற 6-ந் தேதி இப்பெண் தன்னையும் தனது இரண்டு குழந்தைகளையும் ஒரு அறையில் அடைத்து தாளிட்டுக்கொண்டு மண்ணெண்ணெயை அனைவர் மேலும் ஊற்றித் தீயிட்டாள்.

இந்தத் தகவலைக் கேட்ட நெருப்பணைக்கும் படையினர் விரைந்து வந்து இவர்களை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர். பகவதி என்ற அப்பெண்ணின் நிலைமை மோசமாக இருக்கிறது. குழந்தைகள் குணமடைந்து வருகின்றனர்.

சென்னை துறைமுக 'டாக்' தொழிலாளர் பஞ்சப்படி

தொழில் நீதிமன்றத் தீர்ப்பு

சென்னை துறைமுகத்தைச் சேர்ந்த 'டாக்' தொழிலாளர்கள், இந்திய சர்க்காரின் குறைந்தபட்ச ஊதிய நிர்ணய சட்டத்தின் கீழ் தங்களுக்குத் தரப்பட வேண்டிய அலவன்ஸ் ரூ. 40-க்குப் பதிலாக, ரூ. 15 தரப்படுவதை ஆட்சேபித்து தொழில் டிரிபியூனலுக்கு விண்ணப்பித்துக் கொண்டனர்.

விசாரணைக்குப் பின்னர், தொழில் நீதிமன்றம், குறைந்தபட்ச ஊதிய நிர்ணய சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளபடி, கடந்த 1954 ஜனவரி 1-ந் தேதி முதல் தொழிலாளர்கள் அனைவருக்கும் அலவன்ஸ் ரூ. 40 வீதம் கொடுத்துவிட வேண்டுமென உத்திரவிட்டுள்ளது. இந்த உத்திரவுப்படி, ஒவ்வொரு தொழிலாளரும் ரூ. 444 அலவன்ஸ் பாக்கியைப் பெறுவராம்!

சவ மொழியைக் கட்டாய பாடமாக்குதல்!

மக்களின் கருத்தறிவார்களாம்

"சமஸ்கிருத மொழியைக் கட்டாயமாகப் புகுத்துவதற்கு முன் அது பற்றி சர்க்கார் வெகு தீவிரமாக ஆலோசிக்கும்; துவக்கத்தில் சமஸ்கிருதம் படிப்பதற்கு மாணவர்கள் கஷ்டப்படத்தான் செய்வார்கள்; என்றாலும், வர வர, அவர்களுக்கு எவ்வளவுக்கெவ்வளவு சமஸ்கிருத மொழியில் திறமையுண்டாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு தேர்ச்சியும் முன்னேற்றமும் தெலுங்கு மொழியிலும் பெறுவார்கள் என்று நான் நம்புகிறேன்,"

என்று, ஆந்திர மாநில முதலமைச்சர் கோபால் ரெட்டியார், மாநிலத்தில் இடைநிலைக் கல்வி நிலையைத் திருத்தி அமைப்பது குறித்து நிருபர்களிடை பேசுகையில் கூறினார்.

சமஸ்கிருதத்தை கட்டாய மொழியாக்குவது என்பதில் மாறுதல் இல்லையென்றாலும், அதனை இந்த ஆண்டிலேயே அமுல் நடத்தப் போவதில்லையென்றும், அடுத்த ஆண்டிலும்கூட, இப்பிரச்சினை குறித்துப் பொதுமக்களின் கருத்து கோரப்படும் என்றும், எனவே இது விஷயத்தில் எவ்வித அவசரமும் காட்டப்படாது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

மருங்கூர் மலைப் பிரதேசத்தில் இரும்புக் கனிகள்?

அதிலிருந்தே போர்க் கருவிகள் தயாரிக்கப்பட்டதாம்!

மக்களின் வறுமை நிலை மாற இப்பகுதியில் தொழிற்சாலை அமைக்கப்படுமா?

திரு-கொச்சி மாநிலத்தைச் சேர்ந்த மருங்கூர் எனுமிடத்திற்கு அருகில் 'மாக்னசைட்' எனும் ஒருவகை உயர்ந்த இரும்புத் தாதுப் பொருள் கிடப்பதாகக் கூறப்படுகிறது.

பல்லாண்டுகளுக்கு முன்னர், டிலனுய் என்பவர் திருவாங்கூர் இராணுவத் தலைவராக இருந்த போது, அந்த இராணுவத்திற்கு வேண்டிய இரும்புக் குண்டுகள், கனத்த பீரங்கி, வாள், ஈட்டிகள் முதலான இராணுவத் தளவாடங்கள் மருங்கூரில் கிடைத்த இரும்புத் தாதுவினால் தயாரிக்கப்பட்டு, அனேக யுத்த களங்களில் அந்த இராணுவ சாதனங்கள் உபயோகிக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

அப்போது, அங்கு தயாரிக்கப்பட்ட இரும்புத் தளவாடங்கள் சில இன்னமும் உதயகிரி முதலான மலைக் கோட்டைகளில் காணப்படுகின்றனவாம்.

பண்டைய நமது முன்னோர்களின் தொழில் நுணுக்கத்தையும், அறிவுத் திறமையையும் அத்தளவாடங்கள் என்றும் எடுத்துரைப்பனவாக இருக்கின்றனவாம்.

இந்தப் பகுதியில் ஒரு இரும்புத் தொழிற்சாலை அமைக்கப்படுமானால் அனேக பல ரகத் தொழில்கள் விருத்தியடைய ஏதுவாகுமென்றும், குடிசைத் தொழிலுக்கான நல்ல பாதுகாப்பு கிடைக்குமென்றும் கருதப்படுகிறது.

மலபாரிலுள்ள சில குன்றுகளில் சென்னை சர்க்கார் இதுபோல் சிறிய அளவில் இரும்பு தோண்டி எடுக்கும் திட்டங்களை நிறைவேற்றி வருகின்றனர்.

மருங்கூரில் மேற்படி திட்டம் நிறைவேற்றப்படுமானால் பம்புகள், மின்சார மோட்டார்கள், மற்றும் பலவித இயந்திர சாதனங்கள் தயாரிக்கப்படுவதின் மூலம் மக்களின் வறுமை நிலை மாறி, வேலையில்லாத் திண்டாட்டமும் முழுவதுமாக ஒழிக்கப்படும்.

****

தலைமைக் கழகம்: அறிக்கை—19/55

ஜூலை 15:

மும்முனைப் போராட்ட நினைவு நாள்!

★

வரும் ஜூலை 15-ஆம் நாளை தி. மு. கழகத்தின் மும்முனைப் போராட்ட நினைவு நாளாக எல்லாக் கிளைக் கழகங்களும் கொண்டாடுமாக!

★ தென்னாட்டவரை அடிக்கடி அலட்சியப்படுத்திப் பேசிய பண்டித நேருவுக்குக் கண்டனத்தைத் தெரிவிக்கவும், வளர்ந்துவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆற்றலை அறிவிக்கவும் நடத்தப்பட்ட

இரயில் நிறுத்தப் போராட்டம்;

★ ஆச்சாரியாரின் ஆகாத ஆரம்பக் கல்வித் திட்டத்தை அகற்ற வேண்டும் என்று வற்புறுத்த நடத்தப்பட்ட

ஆச்சாரியாரின் ஆரம்பக் கல்வி எதிர்ப்பு மறியல் போராட்டம்;

★ வடநாட்டு அரசியல் ஆதிக்கம்—முதலாளித்துவ ஆதிக்கம்—மொழி ஆதிக்கம் ஆகியவற்றின் அறிகுறியாக இருந்துவரும் டால்மியாபுரம் என்ற புகைவண்டி நிலையப் பெயரை அந்த இடத்தின் பெயரான கல்லக்குடி என்று மாற்றுவதன் மூலம், மேற்கண்ட ஆதிக்கங்களை எதிர்க்கும் சக்தி தென்னாட்டில்—திராவிடத்தில் உருவாகிறது என்பதை இந்திய அரசியலாருக்கு உணர்த்தவும், வட நாட்டு ஆதிக்கம் அகல வேண்டும் என்ற உணர்ச்சியை திராவிட மக்களுக்கு ஊட்டவும் நடத்தப்பட்ட

டால்மியாபுரப் பெயர் மாற்றப் போராட்டம்

ஆகிய மூன்று போராட்டங்களும் மூன்று முனைகளில் 1953 ஜூலை 15-ஆம் நாள் சிறப்பாக நடத்தப்பட்டன.

அந்தப் போராட்டங்களின் மூலம் பெற்ற வெற்றிகளைப் பற்றிப் பொதுமக்களுக்கு நினைவுபடுத்தவும், பெற வேண்டிய வெற்றிகள் குறித்துப் பொதுமக்களுக்கு ஊக்கம் அளிக்கவும் இவ்வாண்டும் சென்ற ஆண்டைப்போலவே ஜூலை 15-ஆம் நாளை கழகத் தோழர்கள் அமைதியான முறையில், கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு ஆகியவற்றைப் பின்பற்றி ஊர்வலம் நடத்துதல், பொதுக்கூட்டம் கூட்டுதல், துண்டு அறிக்கை வெளியிடுதல் போன்ற நிகழ்ச்சிகளை மேற்கொண்டு கொண்டாடுவார்களாக!

ஜூலை 15-ஆம் நாள், திருச்சி மாவட்டக் கழகம் தொண்டர் அணி ஒன்று அமைத்து, டால்மியாபுர இரயில்வே நிலையப் பெயர்ப் பலகையில் 'கல்லக்குடி' என்ற அச்சிட்ட தாளை, அமைதியான முறையில், ஊர்வலமாகச் சென்று ஒட்டி, தி. மு. கழகத்தின் கோரிக்கையை இந்திய அரசியலாருக்கும், பொதுமக்களுக்கும் உணர்த்தும்.

"அறிவகம்,"
சென்னை
6—7—195

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

****

கழகச் செய்திகள்

சென்னை 44-வது வட்ட தி. மு. கழகம்

3—7—55 காலை 11 மணிக்கு கழகப் பணிமனையில் தோழர் ஏ. இராதாகிருட்டிணன் தலைமையில், கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, 1—5—55-லிருந்து 30—6—55 முடிய வரவு-செலவு கணக்கு சரிபார்க்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டதுடன், மாவட்டச் செயலாளரின் பாராட்டு நிகழ்ச்சியை 17—7—55-ல் நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

சேலம் நகர தி. மு. கழகம்

4—7—55 இரவு 10 மணிக்கு, தோழர் இ. ஆர். கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற சேலம் நகர தி. மு. கழகக் கூட்டத்தில், மாநில மாநாட்டு நிதிக்கு 'மணி மகுடம்' நாடகம் நடத்துவதெனவும், தொடர்ந்தாற்போல் 3 செயற்குழுக் கூட்டங்களுக்கு வராமலும், 3 மாத சந்தா தொகை செலுத்தாமலும் இருக்கும் உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுத்து சமாதானம் கேட்கவேண்டுமென்றும், 30-வது வட்டக் கழகச் செயற்குழு உறுப்பினர் தோழர் பெ. இலக்குமணன் இயற்கை எய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்தும், அம்மாப்பேட்டையில் தி. மு. கழகத் தோழர்கள் எழுவர்மீது கொடிப் பிரச்சினையின் காரணமாக சர்க்கார் தொடுத்திருக்கும் வழக்கை எதிர்த்து அத்தோழர்கள் நடவடிக்கை எடுப்பதை ஆதரித்தும், மேற்படி வழக்கிற்கு தேவைப்படும் போது பணஉதவி செய்யலாமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

காரைக்குடி தி. மு. கழகம்

3—7—55 மாலை 3 மணிக்கு தோழர் பால்ராஜ் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், தோழர்கள் சுப. முத்துராமன், இராசேந்திரன் ஆகியவர்கள் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், மாநில மாநாட்டு நிதியைத் திரட்டி இம்மாதம் 10-ந் தேதிக்குள் அனுப்புவது என்றும், உண்மைச் செய்திகளை மறைத்துக் கூறும் 'தினத் தந்தி'யைப் படிப்பதில்லை என்றும் தீர்மானிக்கப்பட்டது.

சின்னாளப்பட்டி தி. மு. க.

1—7—55ல், கழகப் பணிமனையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், கழகச் சார்பில் சொற்பயிற்சி மன்றம் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டதுடன் கழக வரவு - செலவு கணக்குகள் பரிசீலித்து ஒப்புக் கொள்ளப்பட்டது,

கடலூர் (ஓ. டி.) 2-வது வட்ட தி. மு. கழகம்

4—7—55 இரவு 10 மணிக்கு, கழகப் பணிமனையில் தோழர் எஸ். அஜீஸ் தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், கழகத் திறப்புவிழா வரவு—செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டது. பின்னர், மேற்படி கிளைக் கழக அமைப்பிற்காகப் பாடுபட்ட தோழர் கி. கோவிந்தராசனுக்கு நன்றி தெரிவித்தும், மாநில மாநாட்டிற்குப் பொருள் தருவதெனவும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

மல்லசமுத்திரத்தில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

30—7—55 மாலை 7 மணிக்கு, தோழர் எம். ஆர். ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது தோழர்கள் ஈ. ஆர். கிருஷ்ணன், ஏ. சுப்பிரமணியம் ஆகியோர் பேசிய பின் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் கழகக் கொள்கைகளை விளக்கி அரியதோர் உரை நிகழ்த்தினார்.

குருசாமிபாளையத்தில் தி. மு. க. பொதுக்கூட்டம்

30—6—55 மாலை 6-30 மணிக்கு, குருசாமிபாளையம் பாவடியில், தோழர் சுந்தரம் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர் ஈ. ஆர். கிருஷ்ணன் தி. மு. கழக—சமுதாய கொள்கைகளைப் பற்றியும், திராவிட நாடு பிரிக்கப்பட வேண்டிய அவசியத்தைப் பற்றியும் பேசியபின், தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், மிக விளக்கமாக கழக சமுதாயக் கொள்கைகளைப் பற்றியும், சர்க்கார் கொண்டுவர இருக்கும் நிலச் சீர்திருத்தத்தால் விவசாயிகளுக்கு ஒருவித நன்மையும் கிடைக்காது என்பதையும், மேல்நாட்டில் மக்கள் வசதியாக வாழ்க்கை நடத்தும்போது நாம் மட்டும் வசதியாக வாழ முடியாமைக்குக் காரணம் வடநாட்டுச் சுரண்டல்தான் என்பதையும் விளக்கி நீண்டதோர் உரை நிகழ்த்தினார்.

இப்பொதுக்கூட்டத்தின்போது, திருச்செங்கோடு தி. மு. கழகச் சார்பில் 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை கொடுக்கப்பட்டது — பெற்றுக்கொண்டோம் — நன்றி—பொறுப்பாளர்.

பொன்மலை— மேலக்கற்கண்டார் கோட்டை தி. மு. கழகம்

30—6—55 இரவு 7-30 மணிக்கு, கழகக் கட்டிடத்தில், தோழர் கே. துரைராஜ் தலைமையில் நடைபெற்ற செயற் குழுக் கூட்டத்தில், 23—3—55 முதல் 30—6—55 வரை கழக மொத்த வரவு-செலவு கணக்கு சரிபார்க்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டதுடன், தோழர் எ. சுந்தரம் அவர்களின் விலகல் கடிதம் ஏற்றுக் கொள்ளப்பட்டும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சின்னாளப்பட்டி தி. மு. க.

1—7—55ல், கழகப் பணிமனையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் கழகச் சார்பில் சொற்பயிற்சி மன்றம் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டதுடன், கழக வரவு-செலவு கணக்குகள் பரிசீலிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது.

கரூர் 15 - வது வட்ட தி. மு. கழகம்

29—6—55 இரவு 10 மணிக்கு. தோழர் அ. சங்கப்பிள்ளை தலைமையில் செயற்குழுக்கூட்டம் நடைபெற்றபோது, தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். மாநில மாநாட்டு நிதிக்கு கழகச் செயற்குழு உறுப்பினர்களிடமிருந்து ரூ. 1 வீதம் வசூலித்து மொத்தம் ரூ. 10—10—10 நகர தி. மு. கழகப் பொருளாளரிடம் ஒப்படைக்கப்பட்டது.

கீரப்பாளையம் தி.மு. கழகம்

30—6—55ல் நடைபெற்ற இவ்வூர் தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டத்தில், மாநில மாநாட்டிற்கான கிளைக் கழகத்தின் பங்குத் தொகையை சிதம்பரம் வட்டக் குழுச் செயலாளரிடம் கொடுத்துவிடுவதென்று தீர்மானிக்கப்பட்டது.

5-லட்சம் வார்த்தைகள் அடங்கிய சுய சரிதம்!

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ட்ருமன் இரண்டு ஆண்டுகளாக தயாரித்து வரும் சுய சரிதம் இப்பொழுது பூர்த்தியாகியுள்ளது. 5 லட்சம் வார்த்தைகள் அடங்கிய இம்மாபெரும் கட்டுரை நியூயார்க் டைம்ஸ், லைப் மாகஸின், செயிண்டு லூயி போஸ்டு டிஸ்பாச் முதலிய பத்திரிகைகளில் தொடர்ச்சியாக வெளியிடப்படும்

மந்திரி மீது மடாதிபதி பாய்ச்சல்!

★

அமைச்சரின் சமஸ்கிருதக் காதல்!

மதுரை, ஜூலை 10—

"ஆண்டவன் பெயரைச் சொல்லி துதி பாடுவதே அர்ச்சனையாகும்; அப்படிப் பார்க்கும்போது, ஆண்டவனின் பெயர்களெல்லாம் வடமொழியிலேயே— சமஸ்கிருதத்திலேயே இருக்கின்றன — அதிலிருந்துதான் தோன்றியுள்ளன. அப்படியிருக்க, கோயில்களில் தமிழிலேயே அர்ச்சனை நடைபெற வேண்டும் என்று கூறப்படுவதால், சமஸ்கிருத மொழியிலிருக்கும் ஆண்டவன் பெயர்களும் கூடத் தமிழ் மொழியில் மாற்றப்படவேண்டும்; எனவே. எல்லாவற்றையும் மொழி பெயர்த்துக் கொண்டிருப்பதென்பது இயலாததாகும்."

என்று, சென்னை மாகில உணவு— விவசாய அமைச்சர் பக்தவத்சலனார் கோடைக்கானலில் பேசியிருக்கிறார்.

மேலும் அவர், கோயில்களில் சமஸ்கிருத மொழிக்குப் பதிலாகத் தமிழில்தான் அர்ச்சனைகள் நடைபெறவேண்டும் என்று கோரப்படுவதில், தம்மால் எந்தவிதமான அர்த்தமும் புரிந்துகொள்ள முடியவில்லை என்றும் கூறியிருக்கிறார்.

இவ்வளவும் கூறிவிட்டு அமைச்சர், மேலும் பேசியிருக்கிறார்!— "இவைகளை நான் கூறுவதாலேயே முற்போக்கான சீர்திருத்தத்தை எதிர்ப்பதாகக் கருதிவிடக் கூடாது"—என்று!

தமிழில்தான் அர்ச்சனை நடைபெறவேண்டும் என்று கோருபவர்கள், இதற்குப் பதிலாக, கோயில்களில் அர்ச்சனைக்கு முன்னர், தமிழ் மொழியிலுள்ள திருப்பாவை, தேவாரம் போன்ற பாடல்கள் சிலவற்றையாவது, அல்லது, தமிழ் மொழியில் தெய்வ வழிபாட்டிற்குரிய சில பாடல்களுடன் அர்ச்சனைகள் துவங்கப்பட வேண்டும் என்றுவது கோரியிருப்பார்களானால், தாம் அதை மனமார வரவேற்றிருக்கக்கூடும் என்றும் கூறியிருக்கிறார்!

அமைச்சரின் பேச்சு 'ஆத்திரத்தைத்தான் மூட்டுகிறது'!

ஆதரிக்கவும் வேண்டாம்; எதிர்க்கவும் வேண்டாம்!

புதிய கட்டத்தில் தமிழ் மந்திர கோரிக்கை

ஈரோடு, ஜூலை 5—

"அரசியல் துறையில் இன்றைய நிலைமையில் தன்மான விழிப்பு ஏற்பட்டிருப்பது போன்று, பொருளாதாரத் துறை, கைத்தொழில் - கலாசாரம் முதலிய வற்றிலும் ஒரு விழிப்புண்டாகியுள்ளது; அதுபோன்றுதான், தமிழ் மொழியில் வழிபாட்டிலும் ஒரு விழிப்பு உண்டாகியுள்ளது; இதனை - தமிழ் மொழி வழிபாட்டை யாராலும், எக்காரணத்தைக் கொண்டும், எப்பொழுதும் தடை செய்யவே முடியாது.

"தான் பிறந்து, உண்டு, வாழ்கின்ற தாய்நாட்டு மொழிக்கு - தான் பேசி மகிழ்கின்ற தாய் மொழிக்கு — தான் வாழ்த்தி வணங்கி வழிபடுகின்ற இடத்தில் இடமில்லை எனறு கூறுவது - மறுத்துப் பேசுவது ஆத்திரத்தைத்தான் தருகின்றது. தமிழ் மொழி வழிபாட்டை எதிர்ப்பவர்களும், மறுத்துப் பேசுபவர்களும், அதனை ஆதரிக்கவும் வேண்டாம் - வரவேற்றுப்பேசவும் வேண்டாம்; எதிர்த்துப்பேசாமல் இருந்தால் போதுமானது."

என்று, குன்றக்குடி அடிகளார், ஈரோடில் நடைபெற்ற ஆண்டு விழா ஒன்றில் பேசும்பொழுது குறிப்பிட்டுள்ளார்.

பூங்காவில் நுழையவும் தடையா?

இனவெறியர்களுக்கு எதிராக நீதிபதியின் தீர்ப்பு

அமெரிக்காவிலிருக்கும் வெர்ஜீனியா மாநிலத்திலுள்ள கடலோரப் பூங்காவில் இனிமேல் நீக்ரோவர்கள் நுழைய எத்தகைய தடையும் இருக்கக்கூடாது என்பதாக பெடரல் நீதிபதி உத்தரவிட்டுள்ளாராம்!

இதுவரையிலும் இந்தப் பூங்காவிற்குள் வெள்ளையர் தவிர வேறு எவரும் நுழையக்கூடாதெனத் தடுக்கப்பட்டு வந்தது.

தமது தீர்ப்பில், மேற்படி நீதிபதி, "எந்த ஒரு இனத்தின் மீதும் பாரபட்சம் காட்டும் எந்தத் தனி நபருக்கும் அப்பூங்காவை குத்தலைக்கு விடக்கூடாது," என்று குறிப்பிட்டிருக்கிறாராம்.

வெர்ஜீனியாவில் வெள்ளையர்களின் சொந்த உபயோகத்திற்கு மட்டும் 8 பூங்காக்கள் ஒதுக்கப்பட்டிருப்பதும், ஒரு பூங்கா மட்டும் தான் நீக்ரோவருக்கு ஒதுக்கப்பட்டுள்ளதென்பதும் தமக்குத் தெரியும் என்றும், தம்முடைய தீர்ப்பினால் இனிமேல் அந்தப் பூங்காக்கள் எந்த வகையில் பாதிக்கப்படும் என்பதும் தமக்குத் தெரியுமென்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறாம்!

தொழிலாளர்களின் குடும்ப செலவு முறை

இந்திய சர்க்கார் பரிசீலனை

தொழிற்சாலைத் தொழிலாளர்களின் குடும்பச் செலவு முறை பற்றி இந்திய சர்க்கார் பரிசீலனை செய்வரென கூறப்பட்டுள்ளது. தொழிலாளர்களின் வாழ்க்கைச் செலவுப் புள்ளி, மக்கள் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள மாறுதல்களைப் பிரதிபலிக்க வேண்டுமென்றும், ஆகவே, இப்பரிசீலனை முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்குமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியூயார்க் நீதிமன்றத்தில் நீக்ரோ நீதிபதி!

ஹெரால்டு எ. ஸ்டீவன்ஸ் நியூயார்க் மாநில பிரதம நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். இவ்வாறு நியமிக்கப்பட்டிருக்கும் முதல் நீக்ரோ இவரேயாகும்.

அமெரிக்காவில் ஒரு விவசாயப் பண்ணையில் பிறந்த இவருக்கு இப்பொழுது வயது 48 ஆகிறதாம்.

தடையை மீறுவார்?

தமது சொந்த மாநிலத்திற்குள் நுழைவதற்கு விதிக்கப்பட்டுள்ள தடை உத்தரவை விரைவில் நீக்காவிட்டால், வடமேற்கு எல்லைப்புற மாநிலத்திற்குள் தடையை மீறி நுழைய இருப்பதாக கான் அப்துல் கபார்கான் முடிவு செய்துள்ளாராம்!

தி. மு. க. பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன்

செங்குன்றம் வ. உ. சி. மன்ற 3-வது ஆண்டு விழாவில் பேசுகிறார்

12—7—55 மாலை 6 மணிக்கு, செங்குன்றம் அடுத்த கிராண்டுலயனில், தோழர் காஞ்சி மணிமொழியார் தலைமையில், மேற்படி மன்றத்தின் 3-ம் ஆண்டு நிறைவு விழா நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், ஏ. கே. சாமி ஆகியோர் பேசுவர்.

சென்னை 39-வது வட்ட தி. மு கழக செயற்குழு உறுப்பினர்கட்கு

12—7—55 இரவு 9 மணிக்கு சென்னை 39-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம் கழகக் கட்டிடத்தில் நடைபெறும்

திருமணம்

12-7-55 காலை 8¼ மணிக்கு, திருபெரும்பூதூர் வட்டம், ஒரகடம் அடுத்த சென்னகுப்பம் கிராமத்திலுள்ள திரு. பெருமாள் இல்லத்தில், தோழர் பி. அப்பாவு—தோழியர் நீலாவதி திருமணம், திரு. இரா. நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெறும். திருவாளர்கள் மா. கி. தசரதன், சி. வி. எம். அண்ணாமலை, ஒய். என். இராமலிங்கம் ஆகியோர் பேசுவர்.

சென்னை சர்க்கார்மீது குற்றச்சாட்டு?

குடியிருப்பு வசதித் திட்டத்தைப் பயன்படுத்தவில்லையாம்

டி. டி. கே. குறிப்பிடுகிறார்!

"தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு வசதி செய்து தருவதற்காக மத்திய சர்க்கார் திட்டம் தயாரித்து வைத்துள்ளனர்; ஆனால் 'துரதிருஷ்டவசமாக' சென்னை சர்க்கார் இத் திட்டத்தை முழுமையுமாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை; தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்கு சென்னை சர்க்கார் மத்திய சர்க்காரிடம் கடன் எதுவும் கேட்கவில்லை; அத்திட்டத்தை சென்னை சர்க்கார் பயன்படுத்திக் கொள்ளாதது சரியல்ல,"

என்று, இந்திய சர்க்கார் கைத்தொழில் அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், கோவையில் நகரசபையினரால் தமக்குத் தரப்பட்ட வரவேற்பு ஒன்றின்போது பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அணுசக்தி மாநாட்டுக்கு பெண் பிரதிநிதி!

அணுசக்தியை ஆக்க வேலைகளுக்குப் பயன் படுத்துவது பற்றி விவாதிப்பதற்காக ஐ. நா.-வின் ஆதரவில் ஜினீவாவில் நடைபெறப்போகும் மாநாட்டில் கலந்து கொள்ளப்போகும் அமெரிக்கப் பிரதிநிதிகள் குழுவில் திருமதி என்ரிக்கோ பெர்மியும் உறுப்பினராயிருப்பார்.

பிரபல அணுசக்தி விஞ்ஞானியும், நோபல் பரிசு பெற்றவருமான காலஞ்சென்ற பெர்மியின் வாழ்க்கைத் துணைவியரான இவர், தம் கணவர் நடத்திய அணு ஆராய்ச்சிகளில் தமக்குக் கிடைத்த அனுபவங்களை விளக்கும் 'குடும்பத்தில் அணுசக்தி' என்ற புத்தகத்தை எழுதியுள்ளார்.

புதுவைக்கு ரூ. 4 கோடி நிதி உதவி கிடைக்குமாம்!

ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ், புதுவை மாநிலத்திற்கு ரூ. 4 கோடி வரையில் நிதி உதவி தர மத்திய சர்க்கார் தீர்மானித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

உடனே தேவை

கீழ்க்கண்ட ஊர்களில், 'நம் நாடு' இதழை விற்பனை செய்ய முன் பணம் கட்டக்கூடிய பொறுப்பு வாய்ந்த ஏஜண்டுகள் தேவை :—

தஞ்சாவூர்
பெங்களூர்
செங்கற்பட்டு
திருநெல்வேலி
மாயவரம்

பொறுப்பாளர்,
'நம் நாடு'

சென்னைக்கு அருகில் மோட்டார் தொழிற்சாலை

பிரிட்டிஷ் கம்பெனி உதவியுடன் ஆரம்பமாகிறது

பிரபல பிரிட்டிஷ் மோட்டார் உற்பத்தி கம்பெனியாரான 'லேலண்ட்ஸ்', இந்தியாவில் தங்கள் பஸ்களையும், லாரிகளையும் உற்பத்தி செய்யப்போவதாக அறிவித்துள்ளனர்.

இதற்காக புதிய மோட்டார் கம்பெனி ஒன்று உருவாகி இருக்கிறது; 'அசோக் — லேலண்ட்ஸ் லிமிடெட்' என அழைக்கப்படும் இந்தக் கூட்டு நிறுவனத்திற்கு பிரிட்டிஷ் மூலதன உதவியுண்டு.

இந்தக் கம்பெனியில், முதலில், ஏற்கனவேயுள்ள 'லேலண்ட்' பஸ், லாரி ஆகியவற்றின் 'ரகங்கள்' உற்பத்தி செய்யப்படுமென்றும், அதன் பின்னர் இந்தியாவின் தேவையைப் பொறுத்து அதற்கேற்ற விசேட ரகங்கள் தயாரிக்கப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இந்த கம்பெனி சென்னைக்கு அருகே உள்ள எண்ணூர் தொழிற்சாலையில் திறக்கப்படலாமென்றும், அங்கு பல புதிய வாகன்கள் உற்பத்தி செய்வதற்குத் தேவையான இயந்திரங்கள் அனைத்தும், பிரிட்டனிலிருந்து கப்பல் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டு அனுப்பப்படுகிறது என்றும் கூறப்பட்டிருக்கிறது.

"ஆண்டுதோறும் இந்தியாவில் 20 லட்சம் பவுன் பெறுமான 'லேலண்ட்' ரகங்கள் விற்பனை ஆவதால், அங்கு 'லேலண்ட்' உற்பத்தியைத் துவங்குவது இயற்கையே' என்று 'லேலண்ட்' கம்பெனியார் தெரிவித்துள்ளனராம்.

குற்றஞ் சாட்டினவர் மன்னிப்புக் கோர வேண்டுமாம்!

மன்றம் ஏறி மானநஷ்டம் கோரப்போவதாக ஜகத் நாராயணன் மிரட்டல்!

ஜலந்தர், ஜூலை 10—

பஞ்சாப் கல்வி மந்திரி லாலா ஜெகத் நாராயண், தன்மீது இலஞ்சம், ஊழல் புகார்கள் கூறிய ஐந்து சட்டசபை உறுப்பினர்கள் மீது வழக்குத் தொடுக்க முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

பகிரங்கமாக மன்னிப்பு கேட்குமாறும், இல்லையெனில் கோர்ட்டில் வழக்குத் தொடுக்கப்படும் என்றும், அந்த சட்டசபை உறுப்பினர்களுக்குச் சீக்கிரத்தில் 'வக்கீல் நோட்டீஸ்' அனுப்பப்படும் என்றும் தெரிகிறது.

வத்திராயிருப்பில் பொதுச்செயலாளர்

வரவேற்பும்— பொதுக்கூட்டமும்

5—7—55 அன்று மாலை வத்திராயிருப்பு பந்தடித் திடலில், வத்திராயிருப்பு கிளைக் கழகச் சார்பில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கட்கு வரவேற்பும், பொதுக்கூட்டமும் நடைபெற்றது. அன்று இரவு மதுரைத் தோழர் எஸ் முத்து தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், பொதுச்செயலாளர் அவர்கள் தமக்களிக்கப்பட்ட வரவேற்பிற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், வடநாடு தென்னாட்டின்பால் காட்டும் ஓரவஞ்சனையை எடுத்துக் காட்டியும், 'திராவிடம் பிரிந்தால் வாழுமா?' என்று கேட்போருக்குத் தக்க பதிலளிக்கும் முறையிலும் அரியதோர் உரை நிகழ்த்தினார். பல கிளைக் கழகங்கள், தோழர்கள் சார்பில் பொதுச்செயலாளர் அவர்கட்கு வாழ்த்து மடல்கள் வாசித்தளிக்கப்பட்டன.

36 நாடுகளுடன் போட்டி

இந்தியாவுக்கு 1,050 இரயில் வாகன்கள்

கம்யூனிஸ்டு செக்கோஸ்லவேகியா, 1,050 இரயில்வே வாகன்களை வினியோகிக்குமாறு இந்திய சர்க்காரிடமிருந்து, 'ஆர்டர்' பெற்றுள்ளதாகத் தெரிகிறது.

மேற்படி 'ஆர்டரை'ப் பெற செக்கோஸ்லவேகியா 36 நாடுகளுடன் போட்டியிட்டதாகச் சொல்லப்படுகிறது!

ஏழாண்டுகளில் 7,000-வாகன் சாணம்

உரத்திற்குப் பயன்படுத்தும் முயற்சியில் பம்பாய் தீவிரம்

பம்பாய், ஜூலை 8—

பம்பாய் சுற்றுப்புற பகுதியிலிருந்து மாதத்திற்கு சுமார் 2,000-டன் மாட்டுச் சாணம் திரட்டப்பட்டு அண்டை மாவட்டங்களுக்கு உரத்திற்கு அனுப்பப்படுகிறதாம்.

சராசரி, 1,000 வாகன் எடை மாட்டுச் சாணத்தை பம்பாய் வினியோகம் செய்கிறது. இந்தச் சாணத்தை உரத்திற்காகப் பயன்படுத்தப்படும் திட்டம் 1948-ல் ஆரம்பமாகிறது. இதுவரை 7,000-வாகன் மாட்டுச் சாணம் பம்பாயிலிருந்து கொண்டு செல்லப்பட்டிருக்கிறது.

ஒரு வாகனுக்கு, சர்க்காருக்கு சுமார் ரூ. 90 கிடைக்கிறது.

பேச்சுவார்த்தை நடத்த இயலாதாம்!

பனம்பள்ளியின் கைவிரிப்பு

திரு—கொச்சி மாநிலத்தில் உற்பத்தியாகி அரபிக் கடலில் விழும் நதிகளின் உபரித் தண்ணீரை சென்னை மாநிலத்தின் அண்டை மாவட்டங்களுக்கு நீர்ப்பாசன வசதிக்கு உபயோகித்துக் கொள்வது பற்றி திரு-கொச்சி முதலமைச்சர் பனம்பள்ளி கோவிந்த மேனன், இலாகா தலைவர்களுடன் கலந்து பேசுகையில், 'திரு-கொச்சி தண்ணீரை சென்னை மாநிலத்திற்குத் திருப்பிவிடுவது ஆட்சேபகரமானது' என்றும், 'திட்டக் குழுவுடனோ, சென்னை சர்க்காருடனோ இது பற்றிப் பேச திரு-கொச்சி மாநில சர்க்கார் இப்போது தயாராக இல்லை' என்றும் கருத்தறிவித்துள்ளாராம்!

மேற்படி நதிகளில் தண்ணீர் உபரியாக இருக்குமா என்பது பற்றிப் பிரதம எஞ்சினீயர் ஆராய்ந்து வருவதாகவும், அவர் முடிவு தெரியும்வரை பேச்சுவார்த்தைகள் நடத்த இயலாது என்றும் கூறப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.